III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.02/2012

Deposition of witness for the Defendant/DW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 10-02-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான் வெஸ்லி | Village | : |
| Father's / Husband's Name | : வேதநாயகம் | Calling | : |
| Age | : | Taluk | : |

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

**4 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

பி.த.சா.ஆ.1ல் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். புலனாய்வு அலுவலர் பிலால்அகமதை விசாரித்தபொழுது புலனாய்வு அலுவலரிடம் பிலால்அகமது தாவா சொத்தை வாதியுடன் ரூ.3,20,00,000/-விற்கிரயம் ஒப்பந்தம் போட்டு 3 வருட கால அவகாசம் வாதி கேட்டுக்கொண்டபடி ஒப்புக்கொண்டோம் என்று கூறியிருக்கின்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.த.சா.ஆ.1ல் கண்டுள்ள விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் 4 ஆம் பிரதிவாதி மீது வீன் பழி சுமத்தவேண்டும் என்பதற்காக இந்த ஆவணங்களை தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் சரியல்ல. 25.04.2011 அன்று நான் 4 ஆம் பிரதிவாதிக்கு கிரயபத்திரம் எண்.1721/2011 ஏற்படுத்திய போது 4 ஆம் பிரதிவாதி எனக்கு வரைவோலை எண்.003538 மூலமாக ரூ.27 லட்சம் கொடுத்திருக்கின்றார் என்றால் என்னை 4 ஆம் பிரதிவாதி துரைராஜ் கட்டாயப்படுத்தி தான் கிரையம் முடித்தார். எனக்கு எந்த பணமும் தரவில்லை. இந்த வரைவோலை என்னுடைய வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கின்றது என்றால் என்னுடைய வங்கி புத்தகம், ரேசன் கார்டு, பான்கார்டு எல்லாத்தையும் 4 ஆம் பிரதிவாதி தான் வைத்திருந்தார். இந்த விவரத்தை நான் என்னுடைய வழக்குரை, எதிர்வழக்குரை, நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு கவனம் இல்லை. அதேபோல 4 ஆம் பிரதிவாதி என்னோடு மேற்கொண்ட கிரைய பத்திரம் எண்.2035/2011 ஐ ஏற்படுத்தியபோது 11.05.2011 அன்று ICICI வங்கி வரைவோலை எண்.003583 மூலமாக எனக்கு ரூ.52 லட்சம் கொடுத்திருக்கின்றார் என்றால் 4 ஆம் பிரதிவாதி

எனக்கு எந்த பணத்தையும் கொடுக்கவில்லை. அதுவும் எனது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் நான் பேங்க் பாஸ் புத்தகத்தையே பார்த்தது இல்லை. அதே தேதியில் ICICI காசோலை எண்.35106 மூலம் ரூ.11,50,000/- எனது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது என்று சொன்னால் நான் எந்த காசையும் பார்க்கவில்லை. 4 ஆம் பிரதிவாதியுடன் நான் ஏற்படுத்திய கிரைய பத்திரம் எண்.2122/2011 ன் போது 17.05.2011 அன்று 4 ஆம் பிரதிவாதி என்னிடம் ரூ.18,00,000/- ரொக்கமாக கொடுத்தார் என்றால் நான் எந்த பணத்தையும் வாங்கியது கிடையாது. 4 ஆம் பிரதிவாதியுடன் நான் ஏற்படுத்திய கிரைய பத்திரம் எண்.2554/2011 ன் போது 15.06.2011 அன்று 4 ஆம் பிரதிவாதி என்னிடம் ரூ.25,92,000/-ரொக்கமாக கொடுத்தார் என்றால் நான் எந்த பணத்தையும் வாங்கியது கிடையாது. அதேபோல 4 ஆம் பிரதிவாதியுடன் நான் பவர் ஏஜென்ட் மூலமாக 12.10.2012 அன்று ஏற்படுத்திய கிரைய பத்திரம் எண்.3752/2012 க்காக ஜீலை 2011 முதல் 20.08.2012 வரை பல சந்தர்ப்பங்களில் ரூ.38 லட்சமும், 09.10.2012 அன்று ரூ.20 லட்சமும், 11.10.2012 அன்று ரூ.10 லட்சமும் ரொக்கமாக வாங்கினேன் என்றால் அப்படி எந்த பணமும் வாங்கவில்லை. 4 ஆம் பிரதிவாதியிடம் இருந்து நான் ஏற்படுத்தி கொடுத்த கிரைய பத்திரங்களுக்காக ரூ.2,13,42,000/-ரொக்கமாகவும் வரைவோலையாகவும் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த பணமும் நான் வாங்கவில்லை. நான் 4 ஆம் பிரதிவாதியிடம் எல்லா பணத்தையும் வாங்கிவிட்டு அவரை ஏமாற்றுவதற்காக வாதி மனோவாவுடன் சேர்ந்து கொண்டு அவருக்கு தாவா சொத்தை 20 லட்ச ரூபாய்க்கு விற்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4 ஆம் பிரதிவாதிக்கு நான் ஏற்படுத்திய கிரைய பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக வாதியுடன் சேர்ந்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்பதால் என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. மேலும் 4 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையையும் ஏற்றுக்கொள்கின்றார்.

(அறிவார்ந்த 5 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).